Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 071 | புதன்கிழமை Wednesday | 10.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

## பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும்

# ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ தொடக்கம்



முதல்-அமைச்சராக விஜய் பொறுப்பேற்றவுடன், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்படும் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து, இந்த அதிரடிப்படையின் முதல் பெண் ஐ.ஜி.யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் 4 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 30-க்கும் மேற்பட்ட போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு நீல நிற சட்டை, காக்கி நிற பேண்ட் என சிறப்பு சீருடை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கருப்பு நிற தொப்பியும், கருப்பு நிற ஷூவும் வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை கடந்த 29-ந்தேதி அன்று முதல்-அமைச்சர் விஜய் தொடங்கி வைப்பதாக இருந்தது.

ஆனால் நிர்வாககாரணங்களுக்காக கடைசி நேரத்தில் இந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை முதல்-அமைச்சர் விஜய் (செவ்வாய்க்கிழமை) தொடங்கிவைத்தார்..

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் விஜய். 500க்கும் மேற்பட்ட பெண் காவலர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.பெண் காவலர்கள் அணிவகுப்பை ஏற்றார். சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படைக்கு புதிய வகை ஜீப் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை நிகழ்வை தொடங்கி வைத்தது மனதுக்கு நெருக்கமானது என்று முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

சென்னையில் இந்த திட்டத்தை முதல்-அமைச்சர் தொடங்கிவைத்தவுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை போலீசார் தங்கள் பணியை தொடங்கினர்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் செயல்பாடுகள்:-

* பொது இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்
* பொறுப்புடைய அனைவரையும் ஒருங்கிணைத்து, பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குதல்
* பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்கும் நோக்கில் மக்கள் இயக்கமாகச் செயல்படுதல்
* பொது இடங்களில் கண்காணிப்பு மற்றும் சுற்றுக்காவல் பணிகளை மேற்கொள்ளுதல்
* குற்றங்கள் நிகழ வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்
* காவல்துறையின் இருப்பை உறுதிசெய்து, பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்துதல்

இந்த நிகழ்ச்சியில், காவல்துறை டிஜிபி மகேஷ் குமார் அகர்வால், காவல்துறை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள்

# 21 பேர் மீது தகுதிநீக்க நடவடிக்கை இல்லை; சபாநாயகர் அறிவிப்பு



தமிழக சட்டசபையில் கடந்த மாதம் 13-ந் தேதி நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசு வெற்றி பெற்றது. ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன. 5 பேர் நடுநிலை வகித்தனர்.

தி.மு.க. வெளிநடப்பு செய்தது.

இதில், அ.தி.மு.க.வை சேர்ந்த 25 உறுப்பினர்களும் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்திருந்தனர். இவர்களை தகுதிநீக்கம் செய்யக்கோரி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அந்த கடிதம் மீதான நடவடிக்கை குறித்து சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தலைமைச்செயலகத்தில் நிருபர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25 பேரை தகுதிநீக்கம் செய்யக்கோரி எடப்பாடி பழனிசாமி சார்பில் மனு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக, அவரிடம் இருந்து 4 கடிதங்கள் வரப்பெற்றன. அதன்பின்னர், 21 உறுப்பினர்கள் அளித்த விளக்கத்தை ஏற்று, அவர்களை மன்னித்து விடுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார். அவர் வழங்கிய 4 கடிதங்களை முறையாக ஆய்வு செய்தேன்.


எடப்பாடி பழனிசாமி 13-5-2026 அன்று அனுப்பிய கடிதத்தில் தெரிவித்தபடி, உறுப்பினர்களின் மன்னிப்பு கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். அனைத்துமேல் நடவடிக்கைகளையும் கைவிடுகிறேன். எஞ்சிய 4 பேர் மீது நடவடிக்கை எடுக்க அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியிருந்தார். அதன்படி, உறுப்பினர்கள் எஸ்.ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்தியபாமா, இசக்கி சுப்பையா மீது நடவடிக்கை தொடங்கிவிட்டது. என்ன நடவடிக்கைஎன்பதுபிறகு அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ராணுவம் துப்பாக்கி சூடு 30 பேர் பலி

புது டெல்லி: பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஜாயிண்ட் அவாமி ஆக்ஷன் கமிட்டி (JAAC) அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டதை தொடர்ந்து, போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுமார் 200 பேர் காயமடைந்தனர்.

பொதுசட்டம்-ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு விவகாரங்களை காரணம் காட்டி, கடந்த வெள்ளிக்கிழமையன்று ஜேஏஏசி அமைப்புக்கு அதிகாரிகள் தடை விதித்தனர். இந்த தடைக்கு எதிராக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டங்கள் வெடித்தன. வெள்ளிக்கிழமை இரவு பாதுகாப்புபடையினருடனான மோதலின்போது வணிகர் ஒருவர் உயிரிழந்தார்.



இதனையடுத்து ரவாலகோட் நகரில் பல இடங்களில் மோதல்கள் தொடங்கின.

ரவாலகோட்டின் உயர்மட்ட சிவில் அதிகாரியான கமிஷனர் சர்தார் வஹீத் கான் கூறுகையில், "ஞாயிற்றுக்கிழமையன்று ஜேஏஏசி போராட்டக்காரர்கள் மருத்துவமனை பிணவறைக்கு வெளியே கூடியிருந்தனர்.

அந்த இடத்தில் பதற்றமான சூழல் உருவானதால், பாதுகாப்புப் படையினர் போராட்டக்காரர்களைக் கலைக்க முயன்றனர். அப்போது அக்குழுவைச் சேர்ந்தவர்கள் தானியங்கி துப்பாக்கிகள், பெட்ரோல் குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்களைப் பயன்படுத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு பாதுகாப்பு படையினர் பதிலடி கொடுக்கும்போது ஆறு போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர்" என்று கூறினார். இந்த நடவடிக்கையின் போது பலர் கைது செய்யப்பட்டதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், உள்ளூர் மக்களும், ஜேஏஏசி ஆதரவாளர்களும் அரசின் அதிகாரப்பூர்வ தகவலை மறுத்துள்ளனர். பொதுமக்களின் உயிரிழப்பு எண்ணிக்கை இதைவிட மிக அதிகம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஜூலை 27 அன்று அப்பிராந்தியத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 45 இடங்களில், அகதிகளுக்காக 12 இடங்கள் ஒதுக்கப்பட்டதை எதிர்த்து ஜேஏஏசி அமைப்பு வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்திருந்தது. இந்தச் சூழலில் இத்தகைய மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

# மீண்டும் உயரும் தங்கம் விலை

# பவுனுக்கு ரூ.1,040 உயர்வு

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.1,040 என விலை உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களாக தங்கம் விலை குறைந்து வந்த நிலையில் இன்று உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.



உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

கடந்த மாதம் (மே) தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்து தங்கம் விலையில் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், கடந்த 1-ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து குறைந்து வந்தது. ஜூன் 1 -பவுனுக்கு ரூ.1,040, ஜூன் 4-பவுனுக்கு ரூ.160, ஜூன் 5-பவுனுக்கு ரூ.400, ஜூன் 6 - பவுனுக்கு ரூ.1,840, ஜூன் 8-ரூ.1,040 என தங்கம் விலை குறைந்தது.

இந்த சூழலில் சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.130 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,200-க்கும், பவுனுக்கு ரூ.1,040 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,13,600-க்கும் விற்பனையாகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.1,136 என விலை உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,23,928-க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.1,000 என விலை உயர்ந்து, ஒரு பவுன் ரூ.95,360-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று சந்தையில் மாற்றமின்றி விற்பனையாகிறது. அந்த வகையில் வெள்ளி ஒரு கிராம் ரூ.270-க்கும், ஒரு கிலோ ரூ.2,70,000-க்கும் விற்பனையாகிறது.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு; முதலமைச்சர் மாநில இளைஞர் விருது 2026



சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, "முதலமைச்சர் மாநில இளைஞர் விருது" ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இந்த விருது, ரூபாய் 1,00,000/- ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். 2026-ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2026 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது. இவ்விருது தொடர்பாககீழ்க்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்/பெண் ஆகியோர் விண்ணப்பி க்கலாம். கடந்த ஏப்ரல் 1-ந் தேதி. 2025 (01.04.2025) அன்று 15 வயது நிரம்பியவ ராகவும், மார்ச் 31-ந்தேதி, 2026 (31.03.2026) அன்று 35 வயதுக்குள்ளாகவும் இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2025-2026) அதாவது 01.04.2025 முதல் 31.03.2026 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்.) விண்ணப்பதா ரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிட க்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய/மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகள்/பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது.

விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ளசெல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in என்ற இணைய தளத்தில் 06.07.2026 அன்று மாலை 5.45 மணிக்குள் சமர்பிக்க வேண்டும்.

இணையதளத்தில் சமர்பிக்கப்பட்ட விண்ணப்ப படிவம் நகல் மற்றும் உரிய ஆவணங்கள் 3 நகல்கள், 3 பாஸ்போர்ட் சைஸ்போட்டோ, காவல்துறையிடமிருந்து சரிபார்ப்பு சான்றிதழ் ஆகியவைகளை 06.07.2026 மாலை 5.00 மணிக்குள் ஈரோடு மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



மதுரை அவனியாபுரம் பகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பாக தமிழக வெற்றி கழகத்தில் புதிய இளைஞர்கள் இணைப்பு தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்குதல் உள்ளிட்ட முப்பெரும் விழா மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மருது பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது, இதில் கலந்துகொண்ட மின்சாரம் மற்றும் எரிசக்தி வளம் துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தும் தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கி மரியாதை செய்து கௌரவித்தார், தொடர்ந்து அமைச்சர் நிர்மல் குமார்முன்னிலையில்புதியஇளைஞர்கள்கட்சியில்இணைந்தனர், இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் விஜயராம் அவனியாபுரம் மேற்கு பகுதி செயலாளர் மோகன்லால் உட்பட தவெக நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை ராஜ்குமார் ஒருங்கிணைத்தார்

# கோவை குனியமுத்தூர் பகுதியில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி

# ஆதவ் அர்ஜுனாவை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்

கோவை குனியமுத்தூர் பகுதியில், புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது :

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மனைவி மற்றும் அவரது மாமியார் தொடர்பாக வெளியாகியுள்ள சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பல் குறித்த தகவல்கள் மிகுந்த கவலை அளிக்கின்றன. அமலாக்கத்துறை (ED)



அறிக்கையில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

ஜான் பிரிட்டோ பல ஆண்டுகளாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்ததுடன், ஹவாலா முறையில் உறவினர்களுக்கு பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதும் தெரியவந்துள்ளது. ஜான் கென்னடி, ஜான் பிரிட்டோ, அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் மனைவி உள்ளிட்டோர் மீது கேரளாவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், உச்சநீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக் கோரி திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

நீதிமன்ற ஆவணங்களின் அடிப்படையில், இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வருகிறது. தமிழகத்தை போதைப்பொருள் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்பது முதலமைச்சர் விஜயின் நோக்கம். ஆனால், அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் நெருங்கிய உறவினர்கள் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தொடர்புடையதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.ஆதவ் அர்ஜுனா தற்போதைய ஆட்சியின் முக்கிய முகமாகக் கருதப்படுகிறார். அவரது மனைவி தொடர்புடைய வழக்கில் இருந்து முழுமையாக விடுபடும் வரை, அவரை அமைச்சரவையிலும் கட்சிப் பொறுப்பிலிருந்தும் நீக்க வேண்டும். மேலும், ஆதவ் அர்ஜுனாவுக்கு வந்த பணத்தின் மூலாதாரம் என்ன என்பதையும் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். கரூர் சம்பவத்தில்அவரது மூலம் வந்ததாககூறப்படும் பணம் யாருடையது என்பதற்கும் விளக்கம் அளிக்க வேண்டும்.அமலாக்கத்துறையும் இந்த வழக்கின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வர வேண்டும். இந்த விவகாரத்தில் ஆளுநரும், மத்திய உள்துறையும் தலையிட்டு உரிய விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பாக ஆளுநரிடம் மனு அளிக்க உள்ளேன்.

மேலும், லாட்டரி மார்ட்டின் குடும்ப உறுப்பினர்களின் அரசியல் மற்றும் நிதி தொடர்புகள் குறித்தும் மத்திய அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டும். லாட்டரி விற்பனையே ஒரு மோசடியான செயல். ஊழலைவிட போதைப்பொருள் கடத்தல் மிகவும் மோசமான குற்றம்; அது கொலைக் குற்றத்துக்கு சமமானது. எனவே, இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என்றார்.

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர்அணிமாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று சுரண்டை கலைஞர் நினைவாலயத்தில் நடைபெற்றது.



தென்காசி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் வே. ஜெயபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வருகின்ற 13.06.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ள தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி கூட்டம் தொடர்பாக விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும்,மகளிர் அணியின் செயல்பாடுகளை வலுப்படுத்துதல், கழகப் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்த்தல் மற்றும் கூட்டத்தில் அதிகளவில் பங்கேற்பதை உறுதி செய்வது குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.



மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வஞ்சிநகரம் கிராமத்தில் சிப்காட் தொழில்பேட்டை அமைப்பது தொடர்பாக தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில்பேட்டை அமைப்பதற்கான நிலம், அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், சாலை வசதிகள், மின்சாரம், குடிநீர், வடிகால் வசதி உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பணிகளை விரைந்து மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



மதுரை தத்தனேரி பகுதியில் உள்ள திருவிக மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கிங் ஸ்டார் பூ பந்தாட்ட கழகம் மற்றும் திருவிக முன்னாள் இந்நாள் மாணவர்கள் சார்பாக இரண்டு நாட்கள் நடைபெறும் மாநில அளவிலான தீபன் சக்கரவர்த்தி நினைவு பூப்பந்தாட்ட போட்டி துவங்கியது, மதுரை மாவட்ட பூபந்தாட்ட கழக பொதுச்செயலாளர் ராஜேஷ்கண்ணன் தமிழ்நாடு மாநில பூப்பந்தாட்ட கழக பொதுச்செயலாளர் விஜய் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். இதில் மதுரை திண்டுக்கல் சிவகங்கை விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வீரர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் போட்டி முடிவில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ரொக்க பரிசும் பாராட்டு சான்றுகளும் வழங்கப்பட உள்ளன.நிகழ்ச்சி ஏற்பாடுகளை திரு வி க மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குனர் கபிலன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் நரேஷ் ரகு ராஜா மற்றும் விழா குழுவினர்கள் செய்து வருகின்றனர்

# தமிழ்நாடு பனை தொழிலாளர் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொதுதொழிலாளர் சங்கத்தின் வாரிய, தலைவராக

## மாநில பொதுச்செயலாளரான மாரியப்பனை நியமனம் செய்ய வேண்டி, தமிழக பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமாரை சந்தித்து மனு அனுப்பப்பட்டது



தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர் நலவாரிய சங்கத்தின் சார்பாக, சென்னை தலைமை செயலகத்தில் பிற்படுத்த பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமாரை சந்தித்த மாரியப்பன், கோரிக்கை மனு ஒன்றை வழங்கினர். அந்தமனுவில்,கூறப்பட்டுள்ளதாவது...

தமிழ்நாடு பனை தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான, பொது தொழிலாளர்கள் நலவாரிய சங்கத்தின் சார்பாக, மாநிலம் முழுவதும் பனைமரம் வளர்ப்பது, மற்றும் பாதுகாப்பது, குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பல்வேறு நற்பணிகளைசெய்து வருகின்றதாகவும், தமிழகத்தின் தேசிய மரமான பனை மரத்தை பாதுகாக்கும் பொருட்டு, கோவை மாவட்டத்தில் உள்ள 225 கிராம ஊராட்சிகளில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், அமைப்பின் சார்பாகவும், பனைமரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு பனைத் தொழிலாளர் நல வாரியத்திற்கு, தமிழ்நாடு அரசு மூலமாக, வாரிய தலைவர் பதவி நியமனம் செய்யும் பட்சத்தில், அந்த வாரிய தலைவர் பதவியை,மாநிலபொதுச் செயலாளரான,மாரியப்பன் ஆகிய எனக்கு, இப்பொறுப்பை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும், வாரியத்தின் மாநில தலைவர் பதவி எனக்கு வழங்கினால் எந்தவித பாரபட்சமும் இன்றி, சிறப்பாக செயல்பட்டு தங்களின் வழியில் பயணிப்பதாக அவர் குறிப்பிட்டு ள்ளார். மனுவை பெற்று கொண்ட அமைச்சர் இது குறித்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ப்ரைட்ஸ் ஆப் ப்ரஸ்டீஜ் அவார்ட்ஸ் அங்கீகார கூட்டமைப்பின் சார்பாக

# கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள கோ இந்தியா அரங்கில் விருதுகள் மற்றும் பட்டங்கள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## பல்வேறு துறைகளை சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகளும், டாக்டர் பட்டங்களும் வழங்கி பெருமைபடுத்தப்பட்டது

கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள் கோ இந்தியா அரங்கில், ப்ரைட்ஸ் ஆப் ப்ரஸ்டீஜ் அவார்ட்ஸ் அங்கீகார கூட்டமைப்பின் சார்பாக பர்வேறு துறைசார்ந்த சாதனையாளர்களுக்கு அவர்களின் சாதனையை போற்றும் வகையில் சிறப்பு விருதுகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக, ரைட்ஸ் இண்டர்நேஷனல் க்ரூப் அமைப்பின் துணைத்தலைவர், பாலசுப்பிரமணியம்,ஆல் இந்தியன் ப்ரைவேட் யுனிவர்சிட்டி அசோசியேஷன் டீன் மகேந்திர குமார், ஸ்பெக்டர்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனர் ரங்கசாமி,ஸ்பெக்டர்ஸ்டெக்னாலஜி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அனுஷா, அக்ரோ மெட்டேலப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநா ராஜேஷ்குமார், மற்றும் டான்ஸ் அகாடமி ஹனிதா பாலாஜி, டாக்டர் தயாளன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பலதுறையில் சாதனைகள் படைத்த சாதனையாளர்களுக்கு சான்றிதழ்கள், பட்டங்கள், விருதுகள் வழங்கி பெருமை படுத்தினர். முன்னதாக டாக்டர் மகேந்திர குமார் எழுதிய ஷார்ட் டெம்பர் எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து 6 நபர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கப்பட்டது தொடர்ச்சியாக பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிபெருமைப டுத்தப்பட்டதுஎன்பது குறிப்பிடத்தக்கது.





கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் வேப்பூர் தளபதி குணசேகரன் அவர்களின் மகன் லயனல் வில்வஹன் பிறந்தநாளை முன்னிட்டு, முன்னாள் தமிழ்நாடு துணை முதலவரும், திமுக இளைஞரணி செயலாளரும் சேப்பாக்கம் திருவெல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினருமான திரு.உதயநிதி ஸ்டாலினை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது குழந்தையின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி ஸ்டாலின் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து, குழந்தையுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி உறுப்பினர்கள் உடனிருந்தனர்.





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.06.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், நகலூர் சாலையிலிருந்து கொண்டையம்பாளையம் செல்லும் சாலைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொண்டையம்பாளையம் ஓடை மீது சிறிய பாலம் அமைக்கும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# முதல்வர் விஜய் பத்திரிகையாளர்களை சந்திக்காதது ஏன்? அமைச்சர் செங்கோட்டையன் விளக்கம்



சென்னை: "முதல்வர் விஜய் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார்.சொன்னதைச் செய்கிறோமா,மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதைக் காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன." என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செங்கோட்டையன், "வருவாய் துறையில் மக்களுக்கான சேவைகளை விரைவாக வழங்குவது குறித்து அதிகாரிகளுடன் ஆய்வுப் பணிகளை இன்று நடத்துகிறோம். குறிப்பாக சாதித் சான்றிதழ் விரைந்து கிடைக்க என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக முடிவுகளை மேற்கொள்ள இருக்கிறோம். ரேஷன் கார்டுகள், முதியோர் உதவித் தொகை,சமூக நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை எப்படி எளிதாக கிடைக்கும் வகையில் நிறைவேற்றுவது என ஆய்வு செய்ய உள்ளோம். ஆன்லைன் முறையில் பதிவு செய்யும்போது, சில நேரங்களில் கால தாமதம் ஏற்படுவதாகக் குறைகள் உள்ளது. ஆன்லைன் மூலமாக பதிவு செய்தவுடன், அந்தந்த வருவாய் வட்டத்தில் விஏஓக்கள் ஆய்வு செய்து அந்தப் பணிகளை 5 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்கவில்லையென்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு நிலங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளது, அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் ஆய்வு செய்யவுள்ளோம்.பட்டா மாறுதலில் உள்ளதடைகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க உள்ளோம். தமிழகத்தின் பேரிடர் மேலாண்மை பணிக்கு ரூ.1000 கோடி தேவை என சொன்னோம், அதனை முன்னெச்சரிக்கையாகவே மத்திய அரசு வழங்கியிருக்கிறது. முதல்வர் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார்.சொன்னதைச் செய்கிறோமா,மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதை காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாரிதாஸ் எந்த அடிப்படையில் கைதுசெய்யப்பட்டார் என சட்டரீதியாக தெரியவில்லை. பத்திரிகை சுதந்திரம் என்பது தனிப்பட்ட விமர்சனமாக இல்லாமல் மக்கள் வளர்ச்சிப் பணிகளில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடே வளர்ச்சியடையும்." என்று தெரிவித்துள்ளார்.

# திருப்போரூர் அருகே தன்டலம் அதிமுக ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், தமிழக வெற்றி கழகத்தில் இனைந்தார்



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழாவில்

தவெககட்சியின் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் தையூர் தீனா (எ)தினகரன், தலைமையில் திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும்,வழக்கறிஞருமான விஜயராஜ், முன்னிலையில் நீர்வளத் துறை அமைச்சரும், தவெக பொதுச் செயலாளருமான புஸ்ஸி ஆனந்த், கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார், இந்நிகழ்வில் அதிமுகவின் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக இளைஞரணி செயலாளரும், தண்டலம் ஊராட்சி மன்ற தலைவருமான தண்டலம் எம். ஆனந்தன், அதிமுகவிலிருந்து விலகி தவெக கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டார், கட்சியில் இணைந்த தண்டலம் ஆனந்திற்கு தவெக பொதுச் செயலாளர் தவெக கட்சித் துண்டை அணிவித்து தமது கட்சியில் இணைத்துக் கொண்டு வாழ்த்துக் கூறி வரவேற்றார். இதில் தவெக முக்கிய நிர்வாகிகள்,தொண்டர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்,

# கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வு: மத்திய, மாநில அரசு தீர்வுகாண ராமதாஸ் கோரிக்கை





சென்னை: மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் கட்டுமானத் துறை முடங்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வுக்கு மத்திய, மாநில அரசு தீர்வு காண வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழகத்தில் ஜல்லி, எம்-சாண்ட், பி-சாண்ட், சிமெண்ட், இரும்புக் கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது பொது மக்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் இடையே கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மற்றும் ஏழை, எளிய குடும்பங்களின் சொந்த வீடு கட்டும் கனவு தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் கட்டுமானப்பொருட்களின் விலை 40 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உயர்ந்துள்ளதால், ஒரு சாதாரண வீடு கட்டுவதற்கான செலவு பல லட்சம் ரூபாய் அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் விவசாயத் துறைக்கு அடுத்தபடியாக அதிக வேலை வாய்ப்பை வழங்கும் கட்டுமானத் துறையை நம்பி லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். கட்டுமானப் பணிகள் குறையும் சூழல் உருவானால்,தொழிலாளர்களின் வேலைவாய்ப்பும் வாழ்வாதாரமும் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வுக்கு எரிபொருள் விலை உயர்வு, போக்குவரத்து செலவு அதிகரிப்பு, உற்பத்திச்செலவுகள் உயர்வு போன்ற காரணங்கள் கூறப்பட்டாலும், செயற்கைப் பற்றாக்குறை, பதுக்கல் மற்றும் சந்தை முறைகேடுகள் உள்ளனவா என்பதையும் தமிழக அரசு உடனடியாக விசாரிக்க வேண்டும்.

கட்டுமானப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த தமிழக அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவுகளைக் குறைக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டும்.

மக்களின் சொந்த வீட்டுக் கனவு சிதையக் கூடாது; லட்சக் கணக்கான கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது; மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் கட்டுமானத் துறை முடங்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.06.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர்,தவுட்டுப்பாளையம் நியாயவிலைக்கடையில் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய அத்தியாவசிய பொருட்களை ஆய்வு மேற்கொண்டார்.

# எச்1பி விசா கட்டண உயர்வு ரத்து: அமெரிக்க நீதிமன்றம் அதிரடி




பாஸ்டன்: அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு நிர்வாகம் எச்-1பி விசாவுக்கு 1 லட்சம் டாலர் கட்டணம் என்ற அறிவிப்பை அந்நாட்டு நீதிமன்றம் அதிரடியாக ரத்து செய்துள்ளது. இது ட்ரம்ப்புக்கு மற்றொரு பின்னடைவாக கருதப்படுகிறது.

அமெரிக்காவில் வெளி நாட்டினர் தற்காலிகமாக தங்கி வேலை செய்வதற்காக எச்-1பி விசா வழங்கப்படுகிறது. குறிப்பாக, தொழில் நுட்ப நிறுவனங்கள் (ஐ.டி.) திறமையான வெளிநாட்டு ஊழியர்களை பணியமர்த்த இந்த விசா பயன்படுகிறது. குலுக்கல் முறையில் இந்த விசா புதிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில்,அந்த நடைமுறையில் மாற்றம் அறிவிக்கப்பட்டது.

குறிப்பாக ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபாயாக இருந்த எச்-1பி விசா கட்டணத்தை சுமார் 88 லட்சம் ரூபாயாக உயர்த்தி கடந்த ஆண்டு உத்தரவு பிறப்பித்தது ட்ரம்ப் அரசு. இந்த விசாவை பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்தச் சூழலில் எச்-1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி அமெரிக்காவின் 20 மாகாணங்களின் அரசுகள் சார்பில் மாசச்சூசெட்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டது. அப்போது பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து இந்த வழக்கை விசாரித்த நீதிபதி லியோ சொரோகின் அளித்த தீர்ப்பில், 'அமெரிக்க பேரவையின் அனுமதியின்றி அதிபர் ட்ரம்ப், எச்-1பி விசா கட்டணத்தை உயர்த்தி உள்ளார். அவருக்கு அத்தகைய அதிகாரத்தை பேரவை வழங்கவில்லை. இதை இந்த வழக்கில் நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. அதனால் இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் அரசின் முடிவு சட்டவிரோதமானது என நீதிமன்றம் அறிவிக்கிறது. மேலும், இந்த அறிவிப்பு முழுமையாக ரத்து செய்யப்படுகிறது தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்-1பி விசா கட்டண உயர்வால் அதற்கான விண்ணப்பங்கள் தற்போது அமெரிக்காவில் குறைந்துள்ளது. இந்தச் சூழலில் இத்தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.கடந்த பிப்ரவரி மாத தகவலின் படி எச்-1பி விசாவுக்கான ஒரு லட்சம் டாலர் கட்டணத்தை 85 பேர் மட்டுமே செலுத்தி உள்ளனர்.

கடந்த நிதியாண்டில் 3.43 லட்சம் பேர் எச்-1பி விசா கேட்டு விண்ணப்பித்திருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை சுமார் 38 சதவீதம் சரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ட்ரம்ப் அரசு மேல்முறையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆடம்பர வாழ்க்கை குறித்து வீடியோ வெளியிட்ட பெண் யூடியூபர் வீட்டில் ரூ.10 லட்சம் திருட்டு





போபால்: மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர் ரச்சனா குர்ஜார்.பிரபல யூடியூபரான இவர், ஹோம்டூர் என்ற பெயரில் தனது ஆடம்பர வாழ்க்கை குறித்து அடிக்கடி வீடியோக்களை வெளியிட்டு வந்தார். வீட்டின் ஒவ்வொரு அறை, அலமாரிகளில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதை தனது வீடியோக்களில் காண்பித்தார்.

இந்த வீடியோக்களை பார்த்த மர்ம நபர்கள் கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு அவரின் வீட்டில் நுழைந்தனர்.ரச்சனா மற்றும் அவரது குடும்பத்தினர் தூங்கிக் கொண்டிருந்த அறையை வெளிப்புறமாக பூட்டினர். பின்னர் ஹோம் டூர் வீடியோக்களில் பார்த்த காட்சிகளின் அடிப்படையில் வீட்டில் இருந்த நகைகள், பணம் , விலை உயர்ந்த பொருட்களை திருடர்கள் கொள்ளை அடித்து தப்பிச் சென்றனர்.

அதிகாலை 4 மணிக்கு கண் விழித்த ரச்சனா கதவு வெளிப்புறமாக பூட்டப்பட்டிருந்ததை அறிந்து அதிர்ச்சி அடைந்தார். செல்போன் வாயிலாக அருகில் உள்ள உறவினர்களுக்கு அவர் தகவல் தெரிவித்தார்.அவர்கள் விரைந்து வந்து மீட்டனர்.

இது குறித்து ரச்சனா கூறும்போது, "எங்கள் வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் ரூ.10 லட்சம் மதிப்பிலான தங்க,வெள்ளி நகைகள்,விலை உயர்ந்த பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து உள்ளூர் போலீஸில் புகார் அளித்துள்ளோம்" என்றார்.

இது குறித்து போலீஸார் கூறும்போது, "ரச்சனாவின் ஹோம் டூர் வீடியோக்களை பார்த்த திருடர்கள் நன்கு திட்டமிட்டு திருட்டை அரங்கேற்றி உள்ளனர். இது போன்ற வீடியோ வெளியிடுவதை தவிர்ப்பது நல்லது" என்றனர்.



கைத்தறி துறை அமைச்சர் விஜய்பாலாஜி ஈரோடு அரசு மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார். பொதுமக்களுக்குத் தரமான சிகிச்சை அளிப்பது மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கே.கே.ஆனந்த் மோகன் மற்றும் அரசு மருத்துவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.



தமிழக கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி அவர் படித்த ஈரோடு மாநகர் கருங்கல்பாளையம் காமராஜ் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு திடீர் ஆய்வு செய்தார். அப்போது அவருக்கு பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து, வாழ்த்து பெற்றார். தொடர்ந்து மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன் உடனிருந்தார்.



ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தமிழ்ச்செல்வி வெற்றி பெற்றார். இதை அடுத்து புதுப்பிக்கப்பட்ட சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் காலை கணபதி ஹோமம் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தொண்டர்கள் அனைவருக்கும் காலை உணவு பரிமாறப்பட்டது. பொதுமக்கள் தங்கள் குறைகளை அலுவலகத்தில் நேரில் வந்து தெரிவிக்கலாம்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியை சென்னிமலை காவல்துறை இன்ஸ்பெக்டர் ஆர். செல்வகுமார் துவங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் முகாசிப்பிடாரியூர் முன்னாள் ஊராட்சி துணைத் தலைவர் சுப்பிரமணியம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். சென்னிமலையில் தொடங்கிய மராத்தான் போட்டி கொங்கு மஹாலில் நிறைவடைந்தது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.06.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலுள்ள இருப்பு அறையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை ஆய்வு மேற்கொண்டார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.06.2026) ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் காலாண்டு இயல்பு தணிக்கை மேற்கொண்டார்.

# Why Delhi's water crisis keeps returning to the same chokepoint



*A depleted Yamuna, close to a record low, has pushed two of the capital's largest treatment plants to reduce capacity, and led to scarcity of water supply to parts of north, central and west Delhi this summer. Levels at the Wazirabad pond–the reservoir serving the Wazirabad and Chandrawal water treatment plants–dropped to **668.6** feet (above sea level) last week, about five feet below the **674.5**-feet operational threshold. The latest shortfall is the result of the summer heat, but Delhi has for long reeled under a chronic mismatch between the city's water supply infrastructure and its burgeoning demand. The Delhi Jal Board (DJB) operates nine water treatment plants that draw raw water from three sources: the Yamuna, supplied through Haryana; the Ganga through Uttar Pradesh via the Upper Ganga Canal; and the Bhakra Nangal system through Punjab. Approximately **40%** of the city's raw water is from the Yamuna via Haryana. The Yamuna enters Delhi at Wazirabad barrage, where the pondage serves as the holding reservoir from which raw water is driven to the Wazirabad and Chandrawal WTPs. A fall in river level at this point directly constrains supply to both the plants. Plants drawing water from the Ganga canal system–Sonia Vihar and Bhagirathi–are operating as usual. Even at full production, Delhi's water supply falls well short of its needs. The city of **2.3** crore people, on average, requires **1,380** million gallons of water per day (MGD). It gets **1,000** MGD, data by DJB shows.*

# அரசு பேருந்தில் ரூ.10,000 கட்டணத்தில் ஈரோடு முதல் துபாய் செல்ல டிக்கெட்? தமிழக அரசு விளக்கம்




*அரசு பேருந்தில் ஈரோடு முதல் துபாய் வரை செல்ல ரூ.10,000 கட்டணத்தில் டிக்கெட் வழங்கப்பட்டதாக சமூக வலைதளங்களில் புகைப்படம் ஒன்று பரவி வருகிறது. இந்த நிலையில் சமூகவலைதளங்களில் பரவும் டிக்கெட் போலியானது என்றும் தொழில்நுட்பமுறையில் மாற்றியமைக்கப்பட்டது என்றும் தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-*

*ஈரோடு பவானி பைபாஸ் முதல் துபாய் வரை செல்ல அரசு போக்குவரத்து கழகப் பேருந்தில் ரூ.10,000 கட்டணத்தில் டிக்கெட் வழங்கப்பட்டதாக புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இது முற்றிலும் தவறான தகவல்.*

*இது தொடர்பாக அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கோட்டம்) அளித்துள்ள விளக்கத்தில், "சமூக வலைதளங்களில் பரவும் டிக்கெட் (எண்:27846) ஓசூர் புறநகர் கிளைக்கு உட்பட்ட ரூட் எண் 457F-ல் 06-06-2026 அன்று பவானி பைபாசில் இருந்து கோயம்புத்தூர் வரை ரூ.100-க்கு வழங்கப்பட்டது.*

*பவானியிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் தமிழ்நாடு அரசு பேருந்தின் பயணச்சீட்டை போலியாகத் திருத்தி, அதிலிருந்த 'பவானி - கோயம்புத்தூர்' என்ற பயண விவரத்தை 'பவானி - துபாய்' எனவும், ரூ.100 கட்டணத்தை ரூ.10,000 எனவும் மாற்றியமைத்து தொழில்நுட்பமுறையில் போலியாக்கம் செய்யப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தகவல் சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.